இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 27-11-2024

# மகத்தான வெற்றியும் மர்ம வெற்றியும்!

**ஜார்கண்ட் மாநிலத்தில் 'மகத்தான' வெற்றியை 'இந்தியா' கூட்டணி பெற்றுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் 'மர்மமான' வெற்றியை பா.ஜ.க. கூட்டணி பெற்றுள்ளது. உள் உண்மைகளை உன்னிப்பாகக் கவனித்தவர்கள் இதுதான் உண்மை என்பதை ஒப்புக் கொள்வார்கள்.**

ஜார்கண்ட் மாநிலத்தில் பா.ஜ.க. செய்த அரசியல் அராஜகங்கள் அனைவரும் அறிந்தது ஆகும். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒரு வழக்கை அமலாக்கத்துறை மூலமாக தூசி தட்டி எடுத்து ஹேமந்த் சோரனை விசாரணைக்கு வருமாறு அழைத்தது. தன்னை எப்படியும் கைது செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து அவர் தனது முதலமைச்சர் பதவியை விட்டு விலகினார். ஹேமந்த் சோரனைக் கைது செய்து ஜார்கண்டில் முக்தி மோர்ச்சா ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் பா.ஜ.க.வின் சதியாக இருந்தது. ஆனால் கட்சி உறுதியாக ஹேமந்த் பின்னால் நின்று விட்டது. ஹேமந்த் கைது செய்யப்பட்டதும் உடனே கூடிய முக்தி மோர்ச்சா கட்சி தனது அடுத்த முதலமைச்சராக சம்பாய் சோரனை தேர்ந்தெடுத்தது. ஆளுநரிடம் அதற்கான கடிதத்தை கொடுத்ததும், அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்திருக்க வேண்டும். முக்தி மோர்ச்சா கட்சி எம்.எல்.ஏ.க்களை உடைக்க முடியுமா என்று பார்த்தார்கள்.

ஜார்கண்ட் சட்டசபையில் பெரும்பான்மைக்கு 41 உறுப்பினர்கள் தேவை. 43 உறுப்பினர்கள் ஒன்றாக இருப்பதாக வீடியோவை ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி வெளியிட்டது. கூட்டணியாக பார்த்தால் 48 உறுப்பினர்கள் ஆதரவு இந்த அரசுக்கு இருந்தது. ஆனாலும் உடனடியாக ஆட்சி அமைக்க இந்தக் கட்சியை அழைக்கவில்லை. அவர்களது ஆட்சியை அமைக்க கால அவகாசத்தை நீட்டித்து பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத விளையாட்டுகளை விளையாட நேரம் கொடுத்தார் ஆளுநர். பா.ஜ.க. நினைத்தது நடக்கவில்லை. வேறு வழியின்றி அதே கட்சி ஆட்சி அமைக்க அனுமதி அளித்தார் ஆளுநர். நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் சிறையில் இருந்தார் ஹேமந்த். அவரது மனைவி கல்பனா தேர்தல் பரப்புரையைச் செய்தார். உச்சநீதிமன்றம் பிணை வழங்கிய நிலையில் ஹேமந்த் வெளியில் வந்தார். சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தார்.

**ஜார்கண்ட் மாநிலத்தில் மொத்தமுள்ள தொகுதிகள் 81. பெரும்பான்மையை நிரூபிக்க 41 உறுப்பினர்கள் தேவை. 'இந்தியா' கூட்டணிக்கு 56 உறுப்பினர்கள் ஆதரவு இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணி 24 இடங்களையே கைப்பற்றியது. மகத்தான வெற்றியை ஜார்கண்ட் மாநிலத்தில் ஹேமந்த் சோரன் கட்சி பெற்றுள்ளது.**

மகாராஷ்டிராவில் கட்சிகளை உடைத்து பா.ஜ.க. உருவாக்கிய ஒட்டை உடைசல் கூட்டணியானது 'மர்மமான' முறையில் வெற்றி பெற்றிருக்கிறது. எப்போதும் அரியானா, மகாராஷ்டிரா மாநிலத் தேர்தல்கள் ஒன்றாகத்தான் நடக்கும். இம்முறை திட்டமிட்டு தனித்தனியாக நடத்தினார்கள். 'காஷ்மீருக்கு அதிகமான போலீஸ் தேவை என்பதால் மகாராஷ்டிரா தேர்தலை நடத்தமுடியவில்லை' என்று காரணம் சொன்னார்கள். **அரியானா, மகாராஷ்டிரா தேர்தலை ஒன்றாக நடத்த முடியாதவர்கள்தான் இந்தியாவின் அனைத்து மாநிலத் தேர்தலையும் ஒன்றாக நடத்தப் போகிறார்களாம். துப்புக் கெட்ட கொள்கையல்லவா, 'ஒரே தேர்தல்' கொள்கை?**

அரியானா – மகாராஷ்டிரா தேர்தலை ஒன்றாக நடத்தாதது முதல் மர்மம். இரண்டாவது, பெண்களுக்கு 1500 ரூபாய் கொடுப்பதற்காகவே, தேர்தல் தேதியை தள்ளிப் போட்டார்கள். மார்ச் மாதம் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துவிட்டு, 1500 ரூபாய் கொடுப்பதற்காகவே தனியாக இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்கள். இரண்டு மாதத் தொகை முன்கூட்டியே கிடைக்கும் வகையில் உத்தரவுகள் போட்டார்கள். பணம் கிடைத்த மக்களிடம், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 4000 ரூபாயாகத் தரப் போகிறோம்' என்று பரப்புரை செய்தார்கள். இந்த மர்மப் பொய்தான் இரண்டாவது காரணம்.

**288 உறுப்பினர் கொண்ட மகாராஷ்டிரா சட்டசபைக்கு பெரும்பான்மையை நிரூபிக்க 144 உறுப்பினர் தேவை. பா.ஜ.க.132 இடங்களைத்தான் பெற்றுள்ளது. ஷிண்டேவின் சிவசேனா, அஜீத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் ஆகியோர் தயவில்தான் பா.ஜ.க.ஆட்சியை அமைத்தாக வேண்டும். ' கூட்டணி இல்லாமல் காங்கிரசால் இனி வெல்ல முடியாது' என்று பிரதமர் மோடி சொல்லி இருக்கிறார். இத்தகைய தைரியசாலி, மராட்டியத்தில் தனியாக நின்றிருக்கலாமே? சிவசேனாவை உடைத்து ஒரு கட்சியையும், சரத்பவார் கட்சியை உடைத்து ஒரு கட்சியையும் உருவாக்கி, அந்தக் கட்சிகளின் தயவுடன்தானே அவரால் வெல்ல முடிந்தது? எதிரிகளை உடைத்தது மூன்றாவது காரணம்.**

மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மராட்டியத்தில் 48 தொகுதிகளில் 30 தொகுதிகளை 'இந்தியா' கூட்டணி கைப்பற்றியது. மீதம்தான் பா.ஜ.க.கூட்டணி கைப்பற்றி இருந்தது. இதுதான் 'மோடிக்கான' வாக்குகள் ஆகும். இப்போது நடந்தது மோடியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் அல்ல. எனவே இந்த வெற்றியை மோடி சொந்தம் கொண்டாட முடியாது. 'யார் முதலமைச்சர்?' என்பதை 'இந்தியா' கூட்டணி அறிவிக்காத பலவீனமே தோல்விக்கான காரணம் ஆகும்.

மேற்கு வங்க சட்டசபையில் 6 தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் பா.ஜ.க. ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. 6 இடங்களையும் திரிணாமூல் காங்கிரஸ் கைப்பற்றி இருக்கிறது. கர்நாடகாவில் இடைத்தேர்தல் நடைபெற்ற 3 தொகுதிகளையும் காங்கிரஸ் கைப்பற்றி உள்ளது. பா.ஜ.க. தலைவர் பசவராஜ் பொம்மை மகனும் தோற்றுப் போனார். பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர் குமாரசாமியின் மகனும் தோற்றுப் போனார். பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 4 தொகுதிக்கான இடைத்தேர்தலில் 4 இடத்திலும் பா.ஜ.க. தோற்றுள்ளது. அதுமட்டுமல்ல; மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் ஒரு தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் 2 ஆயிரம் வாக்கில்தான் பா.ஜ.க. வெற்றி பெற முடிந்தது. மத்திய பிரதேசத்தில் இரண்டு தொகுதிகளில் ஒன்றைத்தான் பா.ஜ.க. கைப்பற்றியது. கேரளாவில் தேர்தல் நடந்த இரண்டையும் மார்க்சிஸ்ட் கட்சியும், காங்கிரசும் பிடித்துவிட்டது.

**வயநாடு நாடாளுமன்ற இடைத்தேர்தலில் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பிரியங்கா காந்தி வென்றுள்ளார். மூன்றாவது இடத்துக்குப் போயிருக்கிறது பா.ஜ.க.**

**உ.பி., பீகார், ராஜஸ்தான் நீங்கலாக மற்ற மாநிலங்களில் பா.ஜ.க. தோற்றுள்ளது. இவை அனைத்தும் பா.ஜ.க. மீதான மக்கள் மனநிலையைக் காட்டும் செய்திகள் ஆகும். மகாராஷ்ரா மாநில அமைச்சர்களே 377 வாக்குகள், 1523 வாக்குகள், 1509 வாக்குகள், 2161 வாக்குகள் என மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றுள்ளார்கள். இதை 'சமூகநீதி' வெற்றி என்கிறார் பிரதமர் மோடி.**

அதுதான் புரியாத 'மர்மமாக' இருக்கிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.11.2024) தலைமைச் செயலகத்தில், கடலோர காவல் படை கமாண்டர் (கிழக்கு மண்டலம்) இன்ஸ்பெக்டர் ஜெனரல் தத்வீந்தர் சிங் சைனி (Inspector General Thiru.Datwinder Singh Saini. Commander Coast Guard Region East) சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2024) தலைமைச் செயலகத்தில், பதிவுத் துறையின் சார்பில் மதுரை, திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 7 பதிவு மண்டலங்களில் 30 கோடியே 27 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 17 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அதிக கனமழை பெய்தாலும்

# மழைநீரை உடனே வெளியேற்ற மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

***சென்னை, நவ.27-***

***தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில், அதிக அளவில் மழை பெய்தாலும் உடனடியாக வெள்ளநீரை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.***

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2024) பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் அதிக அளவில் மழை பெய்தாலும் உடனடியாக வெள்ளநீரை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகளின் காரணமாக கடந்த அக்டோபர் மாதம் சில மணி நேரங்களிலேயே அதிக மழை பெய்த போதும் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அடுத்த ஓரிரு நாட்களில் மழை பெய்த சுவடே தெரியாத நிலை ஏற்பட்டது.*

*தற்போது பருவ நிலை மாறுதல்களின் காரணமாக பல்வேறு மாநிலங்களிலும் சில மணி நேரங்களிலேயே பெரும் மழைப்பொழிவு ஏற்பட்டு வருகின்றது. இது போன்ற மழை பெய்தாலும் மழை நீர் வடிவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஓட்டேரி நல்லா கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய் மற்றும் வீராங்கல் ஓடை ஆகிய நீர்நிலைகள் 18.10.2024 அன்று முதல் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பராமரிப்பு பணிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*இந்த கால்வாய்களில் இதுவரை மொத்தம் 3,400 மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 2,600 டன் அளவிற்கு வண்டல் மற்றும் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக, அண்ணா நகர் கிழக்கு, மேற்கு, கணேசபுரம், அரும்பாக்கம், சின்மயா நகர், எம்.எம்.டி.ஏ காலனி, நடேசன் நகர், கீழ்ப்பாக்கம் மற்றும் ஓட்டேரி ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் அதிகப்படியான நீர் எளிதாக வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2024) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அரும்பாக்கம் மெட்ரோ இரயில் நிலையம் அருகில் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அங்கு மிதவை அமைப்பின்மீது பொக்லைன் இயந்திரம் பொருத்தப்பட்டு இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் காரணமாக மழைநீர் தடையின்றி, வேகமாக வெளியேறி வருவதை பார்வையிட்டார். தொடர்ந்து கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட கிருஷ்ணா தெருவில் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் மிதவை அமைப்பின்மீது பொக்லைன் இயந்திரம் பொருத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*பின்னர் அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் இருந்து மழைக்காலங்களில் அதிகப்படியான நீர் வெளியேறுவதற்காக, கூவம் ஆற்றிற்கு செல்லும் இணைப்புக் கால்வாயின் முகப்பு பகுதியை அகலப்படுத்தும் கட்டுமான பணிகள் விரைந்து நடைபெற்று வருவதையும், இணைப்பு கால்வாயின் முடியும்பகுதி அமைந்துள்ள அமைந்தகரை காவல் நிலையத்திற்கு அருகே கூவம் ஆற்றினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட அம்பேத்கர் பாலத்தின் கீழ் ஓட்டேரி நல்லா கால்வாயில் மிதவை அமைப்பின்மீது பொக்லைன் இயந்திரம் பொருத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*இந்த ஆய்வுகளின்போது எவ்வளவு மழை பெய்தாலும் மழைநீர் தேங்காமல் இருக்க அனைத்து முன்னேற்பாட்டு பணிகளையும் அலுவலர்கள் இரவு, பகலாக மேற்கொண்டு பொதுமக்களுக்கு உறுதுணையாக பணியாற்றிட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

*இந்த ஆய்வுகளில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன்குமார், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2024) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட அம்பேத்கர் பாலத்தின் கீழ் ஓட்டேரி நல்லா கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர்குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன்குமார், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2024) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, அண்ணாநகர் மண்டலம், அரும்பாக்கம் மெட்ரோ இரயில் நிலையம் அருகில் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையர் வ. சிவகிருஷ்னாமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையர் .கே.ஜெ.பிரவீன்குமார், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் .ந.இராமலிங்கம், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.